பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை 01.10.2023 அதிர்வு 62

திருமலையில் இன்று

## ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடை!

(அப்துல்சலாம் யாசீம் )

திருகோணமலை, நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறாம் கட்டை பகுதியில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு 04

# பௌத்தம் சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல

## - மனோ, கம்மன்பில, இந்திய தூதர் மத்தியில் வல்பொல தேரர் சுட்டிக்காட்டு

"பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகுக்கும் சொந்தமானது. பௌத்த தர்ம வளர்ச்சிக்கு தமிழ் பௌத்தர்கள், தமிழ் சங்க காலம் தொட்டு பாரிய பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். அதையிட்டு நாம் பெருமை அடைய வேண்டும்."

– இவ்வாறு கொழும்பு, பாமன்கடை ஸ்ரீ மகா விகாரையின் பிரதம 05



# மோசமான நீதிப் பிறழ்வு



## நீதிபதிக்கு அழுத்தம் இல்லை என்று எவரும் சொல்ல முடியாது; முல்லைத்தீவு மண்ணில் வைத்து சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



- சீ.ஏ.தமிழ்மாறன் -

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு (ரி.சரவணராஜா) அழுத்தங்கள் இல்லை என்று எவரும் சொல்ல முடியாது. இந்த மோசமான நீதிப் பிறழ்வு ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் நாங்கள் உண்மையை உரத்துச் சொல்ல வேண்டிய கடப்பாடு இருக்கின்றது."

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியில் இன்று நடைபெற்ற மக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04

நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்திய

## வீரசேகரவின் செயற்பாடு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்

### சீ.வீ.கே. வலியுறுத்து



- எஸ்.நிதர்ஷன் -

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட சரத் வீரசேகர போன்றோரின் செயற்பாடுகள் பற்றி பூரணமாக விசாரணை நடத்தப்பட வேண்டும். நீதிபதிக்கு நீதி வழங்கப்பட வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். 04

## மனித சங்கிலிப் போராட்டத்தில் அனைவரும் அணிதிரள்வோம்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் அறைகூவல்



- எஸ்.நிதர்ஷன் -

"தமிழர்களின் மரபுரிமையைக் காப்பதற்காக வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையை மாற்றியமைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அழுத்தங்களையும் உயிர் அச்சுறுத்தலையும் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும். ஆயிரக்கணக்கில் நாங்கள் ஒன்றுதிரண்டு இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்து கொள்வதினூடாக எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவோம்." 05



# தம்பலகாமம் வைத்தியசாலையில் தீ

(அபு அலா, ஹஸ்பர் )

திருகோணமலை, தம்பலகாமம் வைத்தியசாலையில் இன்று (01) காலை ஆறு மணியளவில் தீ விபத்துச் சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவு மற்றும் மருந்தகம் போன்ற பகுதிகளே இவ்வாறு தீப்பற்றியுள்ளது.

அங்கு சத்தமொன்று கேட்டதையடுத்து இவ்வாறு தீப்பரவல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் நோயாளர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. தீப்பற்றியமைக்காண காரணம் இதுவரை வெளியாகவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தீ விபத்தில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மருந்தகம் போன்ற பகுதிகள் இடம்பெற்ற நிலையில், சம்பவ இடத்துக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண பணிப்பாளர் ஆகியோரை உடனடியாகச் சென்று கள நிலவரங்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

தீ விபத்து தொடர்பான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.





# சிறுவர்களுக்குச் செழிப்பான நாட்டை கட்டியெழுப்பும் திட்டம் முன்னெடுப்பு

## சிறுவர், முதியோர் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு


இலங்கையில் சவாலான சகாப்தத்தில் அனைத்து சிறுவர்களுக்கும் செழிப்பான நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக சிறுவர் தினம் மற்றும் முதியோர் தின வாழ்த்துச் செய்தியில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கும் பயணத்தில் தற்போதைய இளம் சந்ததியினரே முன்னோடிகளாக திகழ்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களைக் கொண்டு சவால்களை சமாளிக்கும் சமச்சீர் ஆளுமை கொண்ட திறமையான குடிமக்களாக சிறுவர்களைச் சமூகமயமாக்கும் வகையில் கல்வி முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையின் சிரேஷ்ட பிரஜைகள் தாம் போற்றி வந்த பெறுமதிமிக்க நற்பண்புகளை உலகுக்கு பிரதிபலிக்கும் வகையில் உலக முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# 2022 இல் சிறைக்குச் சென்ற 2 ஆயிரத்து 340 பட்டதாரிகள்!

கடந்த வருடம் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகளில் 2 ஆயிரத்து 340 பேர் பட்டதாரிகள் என்று தெரிவந்துள்ளது.

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விவரங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கைக்கமைய இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

சிறையில் அடைக்கப்பட்ட பட்டதாரிகளில் பெண்கள் 41 பேரும் ஆண்கள் 2 ஆயிரத்து 299 பேரும் அடங்குவர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கடந்த ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.



கடந்த ஆண்டில் இளங்கலை பட்டப் படிப்பை விட உயர்கல்வி பெற்ற 121 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட கைதிகளில் உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற கைதிகளின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 420 பேராவர்.

சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்ற கைதிகளின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 168 பேராவர்.சிறை யில் அடைக்கப்பட்ட வர்களில் மிகக் குறைவானவர்களே பாடசாலைக்கு செல் லாதவர்களாவர். அவர்களின் எண்ணிக்கை 836 பேராவர்.

கடந்த வருடத்தில் தரம் 8 இல் சித்தியடைந்த 6 ஆயிரத்து 747 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட 30 ஆயிரத்து 331 கைதிகளில் 17 ஆயிரத்து 928 பேர் உயர் கல்வித் தகுதி பெற்றவர்கள் என்றும் அந்தத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

# அதிக மின் கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கை 3 ஆம் இடம்

உத்தேச மின் கட்டண அதிகரிப்பு இடம்பெற்றால், தெற்காசியாவிலேயே அதிக மின்சாரக் கட்டணம் செலுத்தும் நாடாக இலங்கை மாறும் என்று எரிசக்தி நிபுணர் திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது தெற்காசியாவில் அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார உற்பத்திப் பொருள்களின் விலையை குறைப்பதற்கு புதிய முறையொன்று அவசரமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று திலக் சியம்பலாபிட்டிய வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், வறட்சியான காலநிலை நிலவிய மாதங்களில் அனல் மின் உற்பத்திக்கான செலவீனங்களை ஈடுசெய்ய வேண்டியதன் அவசியத்தை காரணம் காட்டி, மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபையானது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படவிருந்த மின் கட்டண உயர்வை ஒக்ரோபர் மாதமே தாம் கோரியுள்ளார் என்று மின்சாரசபையின் பொது மேலாளர் நரேந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ள மின்சாரசபையின் கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படும் என்று இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட பிக்கு!

குருணாகல் – பொத்துஹெர, லிஹினிகிரிய, பொத்குல் விகாரையில் வசித்து வந்த பிக்கு ஒருவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று பொத்துஹெர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிக்குவுக்கு சொந்தமான பொத்துஹெர – பரபாவில பிரதேசத்தில் உள்ள தனியார் வீடொன்றில் வைத்து அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கொலை செய்யப்பட்ட பிக்கு இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவில் இருந்து ஓய்வு பெற்றுக் கடந்த மார்ச் மாதம் துறவு வாழ்க்கைக்கு பிரவேசித்திருந்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரிழந்த தெரணம திருமணமானவர் எனவும், அவரது மனைவி சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் அவரை விட்டுச் சென்றுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், பிக்கு மரணமான அன்று இரவு சிலர் அவரைச் சந்திக்க வந்துள்ளனர். வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்த தம்பதிகளை வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறியுள்ளனர் என்று பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந் நிலையில் பிக்குவின் கொலையில் அவருடன் இருந்த நபரே ஈடுபட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வீரசேகரவின் செயற்பாடு...

அவர் மேலும் கூறுகையில்,

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை உணர்ந்த காரணத்தினாலேயே தமது மதிப்பு வாய்ந்த நீதிபதி பதவியை இராஜிநாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்கையில், நாட்டின் நீதி அமைச்சரோ அவர் தாமாக முன்வந்து சட்டமா அதிபரைச் சந்தித்தார், இரண்டு இராஜதந்திரிகளைச் சந்தித்தார், தமது வாகனத்தை விற்றார் என்று கூறுகின்றார். நீதி அமைச்சர் ஒரு அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி. பதவியை இராஜிநாமாச் செய்த பின் ஒருவர் எதையும் விற்கலாம் யாரையும் சந்திக்கலாம் என்பதை தெரியாதவர் அல்லர்.

குருந்தூர்மலைப் பகுதியில் நீதிமன்ற கட்டளைக்கு மாறாக விகாரை கட்டுமானம் இடம்பெறுவது பற்றிய தள ஆய்வுக்கவாகவே நீதிமன்ற அலுவலர்கள் சகிதம் நீதிபதி அங்கு சென்றுள்ளார். ஆய்வுப் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எதுவித அறிவித்தலோ, அழைப்போ, அனுமதியோ இல்லாமல் தமது பரிவாரங்களுடன் அங்கு பிரசன்னமாகியது மட்டுமன்றி நீதிபதியின் கடமைக்கு இடையூறு செய்யும் வகையில் அவருடன் வாதிட முயன்றிருக்கிறார். இது நீதிமன்றத்தையும் நீதிபதியையும் அவமதிக்கும் செயலாகும்.

அதனை நீதிபதி நிராகரித்த காரணத்தால் சரத் வீரசேகர ஆத்திரப்பட்ட நிலையிலேயே காணப்பட்டார். நீதிமன்றச் செயற்பாடுகளில் வேறு எவரும் தலையீடு செய்வது நீதிமன்ற நடைமுறைகளுக்கு மாறானது என்று தெரிந்து கொண்டே சரத் வீரசேகர இவ்வாறு அடாவடித்தனமாகச் செயற்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற அனுபவம் உள்ளவரும், பாதுகாப்புத் துறைசார் குழுவின் தலைவராக உள்ளவருமான சரத் வீரசேகரவின் அன்றைய செயற்பாடுகளே நீதிபதி சரவணராஜாவுக்கு தீவிர உயிர் அச்சுறுத்தலைத் தோற்றுவித்தது. இவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் இணைந்து இனவாதத்தைக் காட்டியிருந்தார்.

இதற்கு மேலாக, நாடாளுமன்றச் சிறப்புரிமையை கவசமாகப் பாவித்து சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக ஆற்றிய உரை அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுவது உறுதிப்படுத்தியிருக்கக் கூடியது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அடிப்படைக் கோட்பாட்டின்படி செயற்பட்ட நீதிபதியைப் பாதுகாக்க வேண்டிய நீதி அமைச்சரும் சபாநாயகரும் பொருத்தமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. சபாநாயகர் ஒப்புக்கு ஒரு ஆலோசனையைத் தெரிவித்து விடயத்தை முடித்துக்கொண்டார்.

நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த வழிபாட்டு நிலையத்தை குருந்தூர்மலை பிக்கு மேற்கொண்ட நிர்மாண வேலைகள், அதற்கு ஆதரவு வழங்கும் வகையில் புத்தசாசன அமைச்சரின் வருகை, நீதிபதியின் தனிப்பட்ட குடும்ப விடயங்களை விமர்சனம் செய்தமை எல்லாமே நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தலைக் கொடுத்திருக்கும் என்பதை உணராதது மட்டுமன்றி, இவற்றையெல்லாம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததன் மூலம் இந்த நாட்டில் நீதி நிர்வாகம் இனவாதத்துக்குள்ளும் பௌத்த மத வாதத்துக்குள்ளும் சிக்கியுள்ளமை வெளிப்படை.

ஒரு நீதிபதியை அந்தப் பதவி சார்ந்து பார்க்காமல் தமிழன் என்று பார்த்து விமர்ச்சித்தையும் இரசித்துக் கொண்டது முழு அரசும். வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் இது. இந்த இலட்சணத்தில்தான் உள்ளகப் பொறிமுறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும், சர்வதேச விசாரணை தேவையற்றது என்றும் சிங்கள ஏகாதிபத்தியம் பேசிக்கொண்டிருக்கின்றது.

எனவே, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட சரத் வீரசேகர போன்றோரின் செயற்பாடுகள் பற்றி பூரணமாக விசாரணை நடத்தப்பட வேண்டும். நீதிபதிக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதேநேரம், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், வலிந்து காணால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்கப்பெறும் வகையிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் தீர்மானங்களுக்கு அமைய பன்னாட்டு பங்களிப்புடன் கூடிய விசாரணைகள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு இங்குள்ள அனைத்து இராஜதந்திரிகளும் மானுட தர்மத்துடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்." - என்றார்.

## மோசமான...

"தன்னுடைய கடமையைச் செய்தமைக்காக அச்சுறுத்தப்பட்ட பிறகு உயிருக்கு ஆபத்து என்றும், தனக்குப் பெரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்று சொல்லியும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் நான் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்துள்ளேன்.

நீதித்துறை எந்தவிதமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதன் வெளிப்பாடு முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் பெரிதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதித்துறை மோசமாகப் பாதிக்கப்படுகின்றதுடன் சுயாதீனம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது என்பது எங்கள் நாட்டின் சரித்திரத்துடன் ஒன்றிய விடயம். புதிய விடயமல்ல. ஒரு சில நீதிபதிகள் அழுத்தங்கள் காரணமாகப் பதவிகளை விட்டு நாட்டைவிட்டு வெளியேறிய தருணங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளன. இம்முறைதான் முதல் தடவையாக இவ்வாறு வெளியேறுகின்ற ஒருவர் வெளிப்படையாக அதனை அறிவித்துவிட்டு பதவிகளை விட்டு விலகி நாட்டை விட்டுச் சென்றுள்ளார்.

நீதித்துறை சுதந்திரமாக இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததை இன்று உலகளாவிய ரீதியில் மறுக்க முடியாத ஒரு அறிவிப்பாக இந்தச் செயற்பாடு அமைகின்றது. அவருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்பது எவரும் மறுக்க முடியாத விடயம். அவருக்குக் கடந்த மாதங்களில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோது இந்த இடத்திலும், வேறு இடத்திலும் போராட்டங்கள் நடந்தன.

நாடாளுமன்றத்தில் கட்டளையை மீறி சரத் வீரசேகர எம்.பி. உரையாற்றி இருக்கின்றார் என்று நான் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருந்தேன். நாடாளுமன்ற ஒழுங்குகள் பற்றிய குழுவுக்கு அது பாரப்படுத்தப்பட்டுள்ளது. நீதிபதிக்கு அழுத்தங்கள் இல்லை என்று எவரும் சொல்ல முடியாது. இந்த மோசமான நீதிப் பிறழ்வு ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் நாங்கள் உரத்துச் சொல்ல வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

தொடர்ச்சியாக இந்த விடயத்தை உலகத்தில் பல நாடுகள் திரும்பிப் பார்க்கும் வண்ணமாகப் பல நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க இருக்கின்றோம்.

கடனாளியாகவும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு நாடாகவும் இலங்கை இருந்து கொண்டிருக்கின்றது. எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்படுவதில்லை. இவ்வாறான பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் புலம்பெயர்ந்த உறவுகள் அதனையும் கருத்தில்கொண்டு தங்களாலான உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

எங்களுக்கான நீதி என்பது தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுக்கொண்டு இருப்பதுடன் அதில் இருந்து நாங்கள் மீண்டெழுவதற்கான போராட்டப் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் மாறுபட்டாலும் தொடர்ச்சியாக இந்த இனம் விடுதலையடையும் வரைக்கும் நாங்கள் போராட்டங்களை முன்னெடுப்போம். அந்தப் போராடடங்கள் மக்கள் சார்ந்ததாக இருக்கும் மக்களின் முழுப்பங்களிப்புடன் அது நிகழும்." - என்றார்.

## ஆர்ப்பாட்டத்துக்கு...

திருகோணமலை நீதிமன்றம் 8 பேருக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தடை உத்தரவை திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் எம்.பி. அன்பார் வழங்கினார். இதையடுத்து இன்றைய ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டது.

திருகோணமலை - இலுப்பைக் குளம் பொரலுகந்த ரஜமஹா விகாரை நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க வேண்டாம் எனக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தடை விதித்திருந்த போதிலும் குறித்த கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதனை நிறுத்துமாறு கோரி இன்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவிருந்தது.

இதையடுத்து நிலாவெளி பொலிஸார் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதால் பிரச்சினைகள் உருவாக்கப்படலாம் என நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் சண்முகம் குகதாசன், தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், ரெலோவின் பொதுச் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம், தமிழ் மக்கள் முன்னணி கட்சியின் இளைஞர் அணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ பிரசாத், திருகோணமலை தமிழர் பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம் உள்ளிட்ட 8 பேருக்கு இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



## பௌத்தம் சிங்களவர்களுக்கு...

தேரர் மற்றும் அமெரிக்கா கலிபோர்னியா லொஸ் ஏஞ்சலஸ் தர்ம விஜய பௌத்த விகாரையின் ஸ்தாபக பிரதம தேரர் கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரர் தெரிவித்தார்.



கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரரின் 80 அகவை நிறைவை ஸ்ரீ மகா விகாரை பக்தர்களின் நிறைவேற்று சபையும், பெருந்தொகையான அண்மைய விகாராதிபதிகளும் இணைந்து பௌத்த தத்துவ நிகழ்வாகக் கொண்டாடினார்கள். இந்நிகழ்வில் விசேட அழைப்பின் பேரில் எம்.பிக்களான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வண. வல்பொல பியனந்த தேரர் மேலும் கூறியதாவது:-



"கணிசமான பண்டைய தமிழ் சங்க கால அங்கத்தவர்கள் இவ்வுலகில் பௌத்தத்துக்கு பெரும் பங்களிப்புகள் வழங்கி உள்ளார்கள். முதலாவது, வண. புத்த கோஷ மகா தேரர் மற்றும் வண. அனுருத்த மகா தேரர் ஆகியோர் அபிதர்ம காவியத்தை எழுதினார்கள். அமெரிக்காவிலும், ஆனந்த குமாரசுவாமியே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்த கல்வியை, 1930 களில் போதிக்க ஆரம்பித்தார். ஆகவே, பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகத்துக்கும் சொந்தமானது. பண்டைய காலங்களில் தமிழ்ச் சங்ககால அங்கத்தவர்களே பௌத்தத்தை வளர்த்து எடுத்தார்கள். இதை நாம் பெருமையுடன் கூறி வைக்க வேண்டும்." - என்றார்.

## மனித சங்கிலி...

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் அதன் பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா அச்சுறுத்தப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும் அளவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார். முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை பிரதேசத்தை சிங்களமயப்படுத்துவதற்குப் புத்த பிக்குகள் எடுத்த முயற்சியை சட்டத்தின் அடிப்படையில் நின்று அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தது அவருக்கு மேல் புத்தபிக்குகள் சினம்கொள்வதற்குக் காரணமாக அமைந்தது.

குறைந்தபட்சம் நீதிமன்றங்களினூடாகத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய நீதி, நியாயத்துக்குக் கூட இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக வேட்டு வைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நீதித்துறையைக் களங்கப்படுத்துவது மாத்திரமல்லாமல் தமிழ் மக்களுக்கு தமது சொந்த இடத்திலும் நீதி கிடைக்க மாட்டாது என்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அரசினது ஜனநாயக விரோத, தமிழ் மக்கள் விரோத இத்தகைய நடவடிக்கைகளை ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிப்பதை வெளிப்படுத்தும் முகமாக வருகின்ற 4ஆம் திகதி புதன்கிழமை மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகரம்வரை மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், என். சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவை இணைந்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கில் நாங்கள் ஒன்று திரண்டு இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொள்வதினூடாக எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவோம். காலை 9 மணி முதல் 10 மணிவரை நடைபெறவுள்ள இந்த மாபெரும் போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாக அன்புடன் அறைகூவி அழைக்கின்றோம்." - என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தற்கொலை எனும் அபத்தம்

நாட்டில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. இந்த அற்பப் போக்குக்கு எதிராக மனித சமுதாயத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அத்தியாவசியம் என்ற அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது.

மனித வாழ்வு அபத்தமானது. அர்த்தமற்றது. துன்பம் நிறைந்தது. தொல்லைகள் மிகுந்தது. இதுதான் நமது இருப்புப் பற்றிய மெய்நிலை. மறுக்கப்பட முடியாத உண்மை இது. இந்த இருப்புப் பற்றிய நிஜ நிலையிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது.

வாழ்வில் அர்த்தமில்லை எனக் கண்டு கொள்ளும் போது பலர் உயிரை மாய்த்துக் கொள்ள எத்தனிக்கின்றார்கள். அது தவறு. வாழ்க்கையில் அர்த்தமில்லாத போதும் கூட வாழத்தான் வேண்டும். அதிலிருந்து தப்பி ஓட முயலக் கூடாது. அபத்தத்தில் இருந்து விடுபடுவதற்காக சாவைத் தேடிச் செல்வது பேடித்தனம். விவேகமற்ற செயல்.

மனித வாழ்வுக்கு அர்த்தத்தை கற்பிக்க வேண்டியவன் மனிதனே. அபத்தத்தில் இருந்தும் வெளிப்பட்டு, வாழ்வதற்கான அர்த்தத்தைத் தேடிக்கொள்ள வேண்டியவன் அவனே.

துன்பங்களின் நிர்ப்பந்தங்களுக்கு அஞ்சி, இருப்பியலைத் தொலைத்து, சாவை நோக்கி ஓடுவது என்பது மனித வாழ்வின் அடிப்படை அர்த்தத்தையே - உள்ளாம்சத்தையே - கேள்விக்கு உள்ளாக்கும் அறிவிலித்தனம்.

உணர்வற்ற, இலக்கற்ற, அர்த்தமற்ற உலகில் உணர்வுள்ள, அறிவுள்ள, அர்த்தத்தைத் தேடுகின்ற பிராணி மனிதனே. தனது ஆறறிவைப் பயன்படுத்தி, வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வதே மனிதப் பிறப்புக்கான அர்த்தத்தைத் தரும். அதுவே மனிதப் பிறப்பின் அர்த்தமும் கூட.

இந்தப் பிரபஞ்சம் அதன் படைப்புக்களில் வித்தியாசமானவனாக - வேறுபட்டவனாக - மனிதனை சிருஷ்டித்திருக்கின்றது. ஒரு விந்தையான பிராணியாக, விழிப்புள்ள ஜீவனாக, எதையும் விசாரித்துத் தேடி அலையும் விவேகம் உடையவனாக, அணுவின் நுணுக்கம் முதல் அண்டத்தின் விரிவு வரை குறுகியும், பரந்தும் ஆய்ந்தறியும் நுட்பம் மிக்கவனாக தோற்றுவித்திருக்கின்றது. இந்தச் சிறப்புக்குரியவனாக ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்து காட்ட வேண்டும். அது அவனது படைப்பின் உள் நோக்கம் - கடப்பாடு - என்பதை அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

தன்னுடைய இருதலைப் பற்றிய சுய பிரக்ஞையுடன் மாத்திரம் பிறப்பெடுக்கும் மனிதன், தனது வாழ்வனுபவத்தின் வாயிலாக, வெறுமையை நிறைவு செய்து, தனது வாழ்வை மாண்புடையதாக மாற்றிக் கொள்கிறான்.

இதற்கான போராட்டமே வாழ்க்கை. தோற்கத் தோற்க சளைக்காமல், மீண்டெழப் போராட வேண்டும். அந்த அகவயமான அனுபவம் - உந்துதல் - அவனை அறியாமலேயே அவனுக்குள் ஊற்றெடுக்க வேண்டும். அந்த ஊற்றுத் தடைப்படுமேயானால் அதனால் நேரும் சிந்தனை வறட்சி - எண்ணக் குழறல் - வாழ்வை இடையில் முடித்துக் கொள்ளும் குறுக்கு வழியை நாடத் தூண்டுகின்றது. அதிலிருந்து விடுபட அவன் தன்னைத்தானே வழிநடத்த வேண்டும். அதற்கான விழிப்புணர்வே தற்கொலை எண்ணத்தை தவிர்க்கச் செய்யும்.

## இராணுவத்தின் எண்ணிக்கையை 2030 இல் குறைப்பதற்குத் திட்டம்

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையை பாதியாக குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைய, இலங்கை இராணுவத்தின் பணியாளர் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டியுள்ள நிலையில் 2030ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தினரின் எண்ணிக்கையை சுமார் ஒரு லட்சமாகக் குறைக்க அரசு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தை மீளாய்வு செய்வதற்கு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கையைச் சுமார் ஒரு லட்சமாகக் குறைத்து இராணுவத்தைத் தொழில் நுட்ப மற்றும் தந்திரோபாய இராணுவமாக மாற்ற அரசு திட்டமிட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடற்படை மற்றும் விமானப்படை வீரர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது என்று அமைச்சர் தென்னகோன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 2023 இல் மத்தியதரைக் கடலில் பயணித்தோரில் 2500 பேர் மாயம்

மத்தியதரைக் கடலின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் முயற்சியில் இவ்வாண்டில் இதுவரையில் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து அல்லது காணாமல் போயுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்தக் காலப் பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 86 ஆயிரம் பேர் ஐரோப்பிய நாடுகளை அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தின் பணிப்பாளர் ருவேன் மெனிக்திவேலா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இது தொடர்பில் அண்மையில் உரையாற்றிய போது இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஒரு லட்சத்து 86 ஆயிரம் மக்கள் மத்தியதரைக் கடலை கடந்துள்ளனர். இதில் 83 வீதமான அதாவது சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் இத்தாலியை அடைந்துள்ளனர்.

இவ்வாண்டின் செப்டெம்பர் 24ஆம் திகதிக்குள் மாத்திரம் 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து அல்லது காணமல் போயுள்ளனர். இந்த உயிரிழப்புகளில் முடிவை காணவில்லை.

ஐரோப்பாவுக்கான தரைவழிப் பாதையும் இதைப்போன்றே ஆபத்து மிக்கது.– என தெரிவித்தார்.

இதேவேளை மத்தியதரைக் கடலைக் கடந்து மக்கள் சென்றடைந்த ஏனைய நாடுகளில் கிரேக்கம், ஸ்பெயின், சைப்ரஸ் மற்றும் மோல்டா நாடுகளும் உள்ளடங்கின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கடல் பயணத்தை கடக்கும் முயற்சியில் உயிரிழந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் அதிகரித்துள்ளது என்று பாதுகாப்புச் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை கடந்த 2022ஆம் ஆண்டில் இக்காலப் பகுதியில் பதிவாகிய ஆயிரத்து 680 ஆகப் பதிவாகியிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மலேசியாவில் மூவர் படுகொலை: கைதான தம்பதியினருக்கு மறியல்

மலேசியாவில் இலங்கையர் மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இலங்கை தம்பதியினரை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மலேசியாவின் செந்தூல் நகரில் இலங்கையர் மூவர் செப்ரெம்பர் (24) அன்று படுகொலை செய்யப்பட்டிருந்த னர்.

இது தொடர்பில் துரித விசாரணையை மேற்கொண்ட அந்நாட்டு பொலிஸார் இலங்கையர் மூவரும் கொலை செய் யப்பட்ட வீட்டில் தங்கியிருந்த இலங்கை தம்பதியினரை கைது செய்திருந்த னர்.

எனினும் இவர்கள் அந்த வீட்டின் உரிமையாளர்கள் அல்ல என்று கோலா லம்பூர் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்ட தம்பதியினர் 7 நாள்கள் விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்று (30) அந்நாட்டு நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்ட நிலையில் மேலும் 7 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட் டுள்ளது.

கொலைகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் இரு இலங் கையர்களைக் கண்டறிய கோலாலம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.





# யாழ். நூலகத்தில் சிறுவர் தின நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் இன்று காலை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சிறார்களின் கலைநிகழ் வுகள் , பரிசில் வழங்கல் என்பன இடம் பெற்றன. யாழ். மாநகர ஆணையாளர் எஸ். ஜெயசீலன் நிகழ்வில் விருந்தினரா கக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

# ‘நிபா’ வைரஸ் தொடர்பில் மக்கள் அச்சப்பட வேண்டாம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

நிபா வைரஸ் தொடர்பில் இலங்கைக்கு அதிக ஆபத்து இல்லை என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய மாநிலமான கேரளாவில் இதுவரை 6 பேருக்கு மட்டுமே நிபா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் இருந்து, இந்தியாவின் கேரள மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அவர்க ளில் இருவர் இறந்து விட்டனர் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், கடந்த 22 ஆம் திகதி முதல் இந்தியாவில் புதிதாக தொற் றுக்குள்ளான நபர் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் பாதிக்கப் பட்ட நோயாளிகளுடன் தொடர்பில் இருந் ததாக சந்தேகிக்கப்படும் 700 இற்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நிபா வைரஸ் பரவுவதைக் கட்டுப் படுத்த இந்தியாவில் அமுல்படுத்தப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக நோய் பரவல் குறைக்கப்பட்டுள்ளது. அதனால் இலங்கைக்கான ஆபத்து மிகவும் குறைவு எனவும் தொற்று நோயி யல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நிலைமை உன்னிப்பாகக் கண் காணிக்கப்பட்டு வருவதால், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படும் என்று தொற்றுநோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போசாக்குக் குறைந்த சிறார்கள் சமூகத்தில் இன்று அதிகரிப்பு!

## சிறுவர் தினத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கவலை தெரிவிப்பு

சிறுவர்களின் சத்துணவு தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைய சமூகத்தில் போசாக்குக் குறைந்த சிறுவர்களே அதிகம் உள்ளனர். ஏராளமான பாடசாலை மாணவர்கள் போதியளவு உணவு இன்றி காணப்படுகின்ற அவல நிலை உள்ளது. இதனால் சிறுவர்களில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. திரிபோஷா போன்ற சிறுவர்களுக்கான மேலதிக உணவுகள் அரிதானவையாக இருப்பதும் கவலையளிக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் அவர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

உலக சிறுவர் தினத்தையும், உலக முதியோர் தினத்தையும் கண்ணியத்துடன் கொண்டாடுவோம். சிறுவர்கள் ஒரு நாட்டின் எதிர்காலம் மற்றும் முதியவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் அந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றிய கண்ணிய மிக்கவர்கள்.



சிறுவர்கள்கள் ஆச்சரியம் நிறைந்த கண்களுடன், உற்சாகத்துடனான வார்த்தைப் பிரயோகத்துடன் உலகின் அழகையும் சிறப்பையும் அனுபவிக்க முயற்சி செய்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியது அனைவரின் பொறுப்பாகும்.

துரதிஷ்டவசமாக நாகரீகமான மனித சமூகத்தில் சிறுவர்களுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய மற்றும் நடக்கக்கூடாத விடயங்களை இலங்கையின் நான்கு மூலைகளிலிருந்தும் தினமும் பார்க்கிறோம், கேட்கிறோம்.

சிறுவர்களின் பாதுகாப்பில் பலத்த சந்தேகம் ஒருபுறம் எழுந்துள்ள நிலையில், மறுபுறம் சிறுவர்களின் சத்துணவு தொடர்பான பாதிக்கக் கூடிய கடுமையான நிலைமையும் இன்று உருவாகியுள்ளது. ஏராளமான பாடசாலை மாணவர்கள் போதியளவு உணவு இன்றி காணப்படுகின்ற அவல நிலை உள்ளது. இதனால் சிறுவர்களில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துக் காணப்படுகின்றது.

திரிபோஷா போன்ற சிறுவர்களுக்கான மேலதிக உணவுகள் அரிதானவையாக இருப்பதும் கவலையளிக்கின்றது.

கல்வியில் கூட சிறுவர்களுக்கு சம வாய்ப்பு கிடைத்துள்ளதா என்பதை மீளக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகியுள்ளது.

குடும்பம், பாடசாலை, உறவினர் சமூகம் உள்ளிட்ட அனைத்து இடங்களையும் சிறுவர்களுக்கு ஏற்ற இடங்களாக மாற்றப்பட வேண்டும். மேலும் அது சமூக மாற்றத்தின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சிறுவர்களும் முதியவர்களும் ஒரு நாட்டின் வளம். இந்த நாட்டில் முதியோர் எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 மில்லியனை எட்டியுள்ளது. முதியோர் நலன், பாதுகாப்புக்கான சட்ட ஏற்பாடுகள், வலுப்படுத்தல் மற்றும் தேசிய முதியோர் நலக் கொள்கையை செயற்படுத்துவதற்கான விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.- என்றுள்ளது.

# சிவனொளிபாத மலைக்கு செல்லத் தடை விதிப்பு !

அனுமதியின்றி பருவகாலம் இல்லாத காலப் பகுதியில் சிவனொளிபாத மலைக்கு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட நேற்று (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அனுமதியின்றி பருவகாலம் இல்லாத காலப் பகுதியில் சிவனொளிபாத மலைக்கு சென்று வழிபடலாம் என்று அண்மைய நாள்களில் வெளியான செய்திகள் உண்மையல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2022-2023 சிவனொளிபாத மலை பருவகாலம் நிறைவடைந்துள்ள நிலையில்,ஸ்ரீ பாதஸ்தானதிபதி சப்ரகமு மாகாண பிரதம சங்கநாயக பெங்கமுவே தம்மதின்னவின் பணிப்புரைக்கமைய அனுமதியின்றி ஹட்டன் வீதி மற்றும் இரத்தினபுரி வீதி ஊடாகவும் சிவனொளிபாத மலைக்கு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

பருவகாலம் இல்லாத காலப் பகுதியில் , சிவனொளிபாத மலைக்கு வருகை தரும் போது, உரிய நிறுவனங்களின் அனுமதியைப் பெற்று நல்லதண்ணி மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சிவனொளிபாத மலை பகுதியில் இடையிடையே பலத்த மழை பெய்து வருவதாலும், அங்கு செல்லும் படிகளில் பாரிய நீரோடை ஓடுவதாலும் ஸ்ரீ சிவனொளிபாத மலைக்கு செல்வது ஆபத்தானது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# நாய்களுக்குத் தடுப்பூசி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக நீர் வெறுப்பு நோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் தொற்றுநோய் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணைந்து நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அதற்கு அமைவாக காரைதீவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் கால்நடை வைத்திய அதிகாரிகளும், பொதுச் சுகாதார பரிசோதகர்களும் ஈடுபட்டிருந்தனர்.





## பள்ளிமுனை வாடியில் திருட்டுப்போன

# 9 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் ஒருவர் கைது

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பள்ளிமுனை மீனவர் ஒருவரின் மீன் வாடியில் இருந்து திருட்டுப் போயிருந்த சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடி உபகரணங்களை மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று சனிக்கிழமை (30) கற்பிட்டியில் வைத்து மீட்டுள்ளனர். அத்துடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் மீன்பிடி வாடி பள்ளிமுனை கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது. அந்த மீனவரின் வாடியில் கற்பிட்டியைச்சேர்ந்த ஒருவர்தங்கி இருந்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன் குறித்த மீன் வாடியில் வைக்கப்பட்டிருந்த படகுகளின் 2 வெளி இணைப்பு இயந்திரம் உள்ளடங்களாக அட்டை பிடிக்க பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன காணாமல் போயிருந்தன.

இந்த நிலையில் வாடியின் உரிமையாளர் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் மன்னார் தலைமையக பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ராமநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரணுக்க விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது பொருள்களை திருடிய சந்தேக நபர் கற்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவர் திருடி விற்பனை செய்த பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# கிளிநொச்சிக் கலைஞர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்

**(அ.அஸ்வர்)**

கிளிநொச்சி மாவட்ட செயலகமும், “ஏழ்மைக்கு உதவும் உறவுகள்” அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த கலைஞர்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

ஏழ்மைக்கு உதவும் உறவுகளின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் திருமதி. ஹ.சத்திய ஜீவிதா பிரதம அதிதியாக கலந்து கொண்டு கலைஞர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

சுவிஸ் நாட்டைச்சேர்ந்த தமிழர் கலை கலாசார மன்றத்தின் ஊடாக விஜய் குணனன் 15 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது குடும்பத்தாரின் நிதி அனுசரணையில் குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இத் திட்டத்யில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 22 கலைஞர்கள் தெரிவு செய்யப் பட்டிருந்தனர்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோ கத்தர் கா.இராசதுரை, கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வே.தர்ம பாலன், ஏழ்மைக்கு உதவும் உறவுகளின் இலங்கைக்கான இயக்குநர் திருமதி.உசா சசிக்குமார், ஆலோசகர் வே.வசந் தரூபன் உட்பட கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.






# மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி சமூகம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன இணைந்து கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடைபவனி ஒன்றை நேற்று(30) நடத்தின.

இந்தப் பவனியை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரும், புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்கப் போஷகருமான யோசப் பொன்னையா ஆண்டகை ஆரம்பித்து வைத்தார்.

இப்பவனி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

நடை பவனி கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி திருமலை வீதி வழியாக தாண்டவன்வெளிவரை சென்று அரசடியை அடைந்து அங்கிருந்து மீண்டும் கல்லூரியை சென்றடைந்தது.

கல்லூரியின் பெருமைகளையும் அதன் சரித்திரத்தையும், சாதனைகளையும் எடுத்துக் காட்டும் அலங்கார ஊர்திகள், பதாதைகள் என்பன இதில் காட்சிப்படுத்தப்பட்டன.

“மைக் வோக்” நடைபவனி- 2023 மூலம் மீண்டும் ஒரு முறை மட்டக்களப்பு சமூகத்துக்கும், முழு இலங்கைக்கும் புனித மிக்கேல் கல்லூரியின் அருமை பெருமைகளை பறைசாற்றும் முகமாகவே இந்த நிகழ்வைப்பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட மூன்று முதுசங்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.









# அதிகரித்த தவறான முடிவுகள்...!

அரிது அரிது மானிடராய் பிறப் பது அரிது என ஒளவையார் மனிதரின் பிறப்பு பற்றியும், வாழ்க்கை பற்றியும் கூறுகிறார். எத்தனை உயிரினங்கள் இருந்தாலும் கூட மனிதப் பிறப்பு அற்புதமானது. மனித வாழ்க்கை இறைவனால் கட்டமைக்கப்படுவதுடன், மனித வாழ்வில் பிறப்பு – இறப்பு என இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு அழகிய வாழ்க்கை காணப்படுகிறது. சுவாரஸ்யமான மனித வாழ்க்கையின் இறுதியில் மனிதன் இயற்கையாக இறக்கும் போது, “இயற்கை எய்தினான், இறைவனடி சேர்ந்தார், காலமாகினார், ஆத்ம சாந்தி அடைந்தார்” எனக் கூறுவார்கள். மனிதன் இயற்கைக்கடுத்து ஒரு முழுமையான வாழ்க்கையை வாழமுடியாமல் ஏதோ ஒரு காரணத்தால் வாழ்க்கையை முடித்துக் கொண்டால் அதனை “செயற்கை மரணம் அல்லது துர்மரணம்” என முன்னோர்கள் கூறுவதுடன் ஆன்மா சாந்தியடையாது எனவும் கூறுவார்கள். இவ்வாறான துர்மரணமாக தற்கொலை காணப்படுகிறது.

தற்கொலை என்பது நம்மை நாமே கொலை செய்து கொள்வதாக காணப்படுகிறது. பொதுவாக சமயங்கள் தற்கொலையை இறை நம்பிக்கைக்கு எதிரானது என கூறுகின்றது. செப்ரெம்பர்10 உலக தற்கொலை தடுப்பு நாளாகும். இந்நாளை 2003 இலிருந்து பிரகடனப்படுத்தப்பட்டு காணப் படுவதுடன் அனைவரும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய நாளாகவும் காணப்படுகிறது. ஏனெனில் இன்றளவு எமது நாட்டில் மட்டுமல்ல, உலகம் எதிர்நோக்கும் ஓர் முக்கிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக தற்கொலை விளங்குகிறது.

உலகளாவியரீதியில் தற்கொலை இன்னும் முற்றாக கட்டுப்படுத்தப்படாததும், அதேவேளை மிகச்சரியாக எதிர்வு கூறப்படாததுமான பிரச்சினையாகவே காணப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் தற்போதைய ஆய்வுகளின்படி வருடத்திற்கு 8 லட்சத்துக்கும் அதிகமானோர் தற்கொலை செய்கின்றனர். அதாவது 40 செக்கனுக்கு ஒரு நபர் என்ற ரீதியில் இடம்பெறுகின்றது.

குறிப்பாக 15-29 வயதுப் பிரிவினர் அதிகளவில் இறப்பதற்கு தற்கொலையே பிரதான காரணமாக விளங்கு கின்றது. 15-44 வயதுவரை 55 சதவீதமானவர்களும், 45 வயதின் மேல் 45 சதவீதமானோரும் இறப்பதாக அமெரிக்க நோய்தடுப்பு மையம் கூறுகின்றது.

பெண்களைவிட 2 மடங்குக்கு மேல் ஆண்கள் தற்கொலை செய்கின்றனர். தற்கொலைக்கான முயற்சியில் பெண்களே அதிகமாக ஈடுபடுகின்றனர். தற்கொலை செய்தல் என்பது ஒருவன் தன் உயிரை மாய்க்கும் பொருட்டு திட்டம் தீட்டி, திட்டத்தை நடைமுறைப்படுத்தி தனது உயிரை மாய்த்துக் கொள்ளல் ஆகும். தற்கொலைக்கான திட்டத்தைத் தீட்டி அதனை நடைமுறைப்படுத்தும் போது தடுக்கப்பட்டு அல்லது சிகிச்சையின் பின் காணப்படின் அதனை “தற்கொலை முயற்சி” எனலாம்.

ஒருவர் தற்கொலை செய்து இறக்கும் நேரத்தில் 10-15 மனிதர்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதுடன் 100 இற்கும் அதிகமானவர்கள் அதனைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நமது நாட்டிலும் கூட ஒருவருடத்தில் சுமார் 3000 பேர் அதாவது ஒரு நாளுக்கு 8 அல்லது 9 பேர் சராசரியாக தற்கொலை செய்கின்றனர் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

என்ன காரணங்களின் அடிப்படையில் மனிதர்கள் தற்கொலை செய்கிறார்கள் என பார்த்தோமாயின் இவற்றுக்குப் பல்வேறு காரணங்கள் வழிவகுக்கின்றன. மனச்சோர்வு, பொருளாதாரப் பிரச்சினை, காதல் தோல்வி, குடும்பப் பிரச்சினை, பாலியல் இயலாமை, விவாகரத்து, சமூக ஊடகங்களின் தவறான செயற்பாடு, பரீட்சைத் தோல்வி, வேலையின்மை, தீராத நோய்கள், உளவியல் சார் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை எனப் பல காரணங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

## மனச்சோர்வு

மனச்சோர்வு என்பது பொதுவாக நாம் ஒரு பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாத நிலையாக காணப்படுகிறது. தற்கொலை இறப்புக்களில் 90 விதமானவை மனச்சோர்வாலேயே நிகழ்கின்றன என்று ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. வேலையின்மை, அழுத்தங்கள், குற்ற உணர்ச்சி, தாழ்வு மனப்பான்மை என பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் ஏற்படும் மனச்சோர்வு நிலை மூலமும் அதன் மூலம் உருவாகும் எதிரான எண்ணங்களும் தற்கொலை செய்ய தூண்டுவனவாக விளங்குகின்றன.

## பொருளாதார பிரச்சினை

கொரோனாவின் பின் ஏற்பட்ட பொருளாதார சரிவுநிலை எமது நாட்டில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் பொருள்களின் விலை அதிகரிப்பு, அடிப்படை பொருள்களின் தட்டுப்பாடு, கடன் பிரச்சினைகள் மற்றும் வேலையில்லா நிலைமைகள் ஏற்பட்டன. அத்துடன் பணி நீக்கம் மற்றும் வீட்டினுள் முடக்கப்பட்ட நிலை, வேலை அழுத்தங்கள் மக்களுக்கு உடல், உள ஆரோக்கியத்தைக் கெடுத்து வாழ்க்கையில் உறுதியற்ற தன்மையையும் ஏற்படுத்தின.

## போதைப்பொருள் பாவனை

இன்று உலகளாவிய ரீதியில் முக்கிய பிரச்சினையாக காணப்படும் போதைப் பொருள் பாவனை நமது நாட்டிலும் தற்காலங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவது நாம் அறிந்ததே. உணர்ச்சி ரீதியாக நாம் கவலையிலுள்ள போது அதிக கவலையையும், சந்தோசத்திலுள்ள போது அதிக சந்தோசத்தையும் ஏற்படுத்தவல்ல இது சுய அறிவு, தன்னிலை தெரியாது ஒருவர் செயற்படவும், சமூகவிரோத செயல்கள் செய்யவும் காரணமாகின்றது. அதுமட்டுமல்லாது துஷ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடவைத்து அழுத்தங்களுக்கு ஆளாக்கி தற்கொலை செய்யவும் வழிவகுக்கின்றது.

## சமூக வலைத்தளங்களின் தாக்கம்

தற்கொலைசார் செய்திகள், அது எப்படி நடந்தது, எங்கே இறந்தார் என்பதை மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட ஒன்றையே செய்து (முன்னிலைப்படுத்தி) காட்டுவதன் மூலம் மாணவர்களின் மனநிலை பாதிப்படையும். அதாவது, “இறுதி தற்கொலை தான்” என்ற எண்ணம் ஏற்பட்டு தற்கொலை செய்ய ஓர் உந்து சக்தியாக விளங்குகின்றது.

## மனநலப் பிரச்சனைகள்

மனச்சோர்வு உட்பட எண்ணச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகரித்த தவறான முடிவுகள்...!

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுழற்சி நோய், இருதுருவக்கோளாறு, மனச் சிதைவு நோய் முதலான மன நிலை நோய்கள் மனிதர்களில் அதீத சந்தேகம், தனிமையை ஏற்படுத்தி தற்கொலை எண்ணம் அடிக்கடி ஏற்பட்டு தற்கொலை செய்ய இவை அத்திபார மிடுகின்றன.

**காதல் தோல்வி**

பொதுவாக எல்லோரும் இளவயதினர் இறந்துவிட்டாலே காதல் பிரச்சினை என பேசத் தொடங்கிவிடுவார்கள். ஆனால் இது பிரதான காரணம் அன்று. இது தற்கொலை ஏற்பட ஒரு காரணமாக காணப்படுகின்றது. காதலில் ஏமாற்றம், பிரிவு, புரிந்துணர்வின்மை, சந்தேகம் என்பன குறிப்பிட்ட ஆணையோ, பெண்ணையோ தன்னைத்தானே அழிக்கச் செய்கின்றது.

**குடும்ப உறவுப் பிரச்சினைகள்**

குடும்பத்தில் ஏற்படும் சிறு பிரச்சினைக்காக நான் சாகப் போகின்றேன் எனக்கூறி இறந்த சம்பவங்கள் நாம் அறிந்ததே. குடும்பத்தில் ஏற்படும் சண்டைகள், மனக்கசப்புக்கள், விரோதம் என்பன உச்சமடைந்து தற்கொலை செய்யவும் காரணமாகின்றது. கணவன்-மனைவி உறவு நிலை அதாவது, புரிந்துணர்வின்மை மிகப்பெரிய காரணமாகின்றது. நல்ல சீரான நட்பு வட்டாரங்கள், சமூக குழுக்கள் காணப்படாமையும், அதனால் ஏற்படும் தனிமை மற்றும் சிக்கல்கள் தற்கொலை செய்ய தூண்டுகின்றன.

**தொழில்நுட்ப சாதன ஆளுகை**

பொழுதுபோக்கு மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் நவீன வளர்ச்சியில் அதீத வளர்ச்சி அடைந்தாலும் கூட மனிதனுக்கு நன்மையைவிட அதீக தீய தாக்கங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக சினிமாவை எடுத்துக் கொண்டால் அதில் காட்டப்படும் தற்கொலைசார் பாடல்கள், காட்சிகள் பரவலாகவும் முன்னிலைப்படுத்தி காட்டப்படுவதால் குழந்தைகள் இதனைப் பார்க்கும் போது "பிஞ்சு நெஞ்சில் நஞ்சை விதைப்பது" போன்றாகிவிடும். சிறுவயதில் இதனைப் பார்த்து இதுதான் இறுதி என நினைத்து அவர்களும் கற்றுக் கொள்கின்றார்கள்.

**தவறான அழுத்தங்கள், அறியாமை**

பெற்றோர்கள் குழந்தைகள் சீரான முறையில் உரிய அன்பு, அரவணைப்பு இன்மை, பாதுகாப்பில்லாத முறையில் வளர்ப்பு மற்றும் முறையற்ற திணிப்புக்கள் அதாவது பெற்றோரின் விருப்பத்தின் பொருட்டு கல்வியை பிள்ளைகளில் திணித்தல் மற்றும் சமூக கட்டுப்பாடுகள் என்பன குழந்தையின் மனதில் பயம் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே எதிர் பாலினம் மற்றும் அவர்கள் பற்றிய புரிதல்கள், பிரச்சினையால், சூழலுக்கேற்ப செயற்படுதல் என்பன கற்பிக்கப்படாத விடத்து ஏற்படும் நிலை விரக்தி மற்றும் மனப்பக்குவமற்ற நிலையை உண்டாக்கித் தற்கொலைக்கு அத்திபாரமிடுகின்றது.

இவ்வாறான பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் தற்கொலை எண்ணம் உண்டாகி தற்கொலை செய்கிறார்கள். தற்கொலை செய்பவர்களை நாம் பலவழிகளில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். உடல் உள நடத்தை ரீதியில் பலமாற்றங்களை கண்டுகொள்ளலாம். இதைப்பற்றி அதிகம் பேசுவார்கள் (பேசாமல் சாகலாம் போல, நான் இருந்து என்ன பயன்).

உணவு மற்றும் உடை அதிகளவில் நாட்டமின்மை, தனிமையை விரும்பல், படிப்பில் நாட்டமின்மை, உடல்சோர்வு, வேலையில் தரம் குறைதல், பாலியல் விருப்பமின்மை, உணர்ச்சிவசப்படுதல், ஒதுங்கியிருத்தல், அடிக்கடி சோகம் முதலான பல்வேறுபட்ட அறிகுறிகள் மூலம் அவர்களை அடையாளம் காண முடியும்.

தற்கொலை காரணமாக பல விளைவுகளும், தாக்கங்களும் ஏற்படும் என்பது அனைவரும் அறிந்ததே. இது தனியே ஒருவரைப் பாதிப்பதில்லை, ஒரு சமூகத்தையே பாதிக்கின்றது. ஒரு தனிநபர் இறக்கும் போது அவருடன் நெருங்கிய தொடர்புடைய 6 நபர்களை பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. வாழ்க்கையின் முடிவு என்று கருதிச் செய்யும் தற்கொலை அவர்களின் குடும்பம் மட்டுமன்றி பலரையும் பாதிப்பது நாம் அறிந்ததே. சமூக ஊடகங்களின் தவறான செய்தி பரப்புதல் மூலம் அதிகம் பரப்பப்பட்டு இதன்மூலம் பலர் தற்கொலைக்கு தூண்டுவதற்கும் மனப் பாதிப்புக்கள் உருவாகவும் வழிவகுக்கின்றது.

"சுயதீங்கு" என குறிப்பிடப்படும் இந்த தற்கொலையை நாம் எவ்வாறு தடுக்கலாம் அல்லது தீர்வு காணலாம் எனப் பார்க்கலாம்.

**சீரான தொடர்பாடல்**

தற்கொலை எண்ணம் உள்ளவரை நாம் அடையாளம் கண்டால் அவரை அழைத்து அவரின் பிரச்சினைகளை நாம் முழுமையாகக் கேட்கவேண்டும். நான் உன்னுடன் இருக்கிறேன் என்ற நம்பிக்கையை அளித்தல் வேண்டும். அவர்களின் மனக் குமுறல்களைச் செவிசாய்த்துக் கேட்பதன் மூலம் தற்கொலையொன்றிலிருந்து மீள உதவியாக இருக்கும்.

பொய்யான நம்பிக்கையை நாம் வழங்ககூடாது. அவரைத் தனிமையில் விடாது நெருங்கியவர்கள் மற்றும் உறவினர்களுடன் தமது பிரச்சினைகள் மற்றும் கஷ்ரங்களைப் பகிர்வதன் மூலம் குறித்த நிலையை கையாண்டு தற்கொலைக்கு தீர்வு காணலாம். அத்துடன் ஒவ்வொரு மனிதரும் சீரான நட்பு வட்டாரம் மற்றும் குடும்ப உறவுகள் அமைத்தலும் சீரான தொடர்பாடல் மூலமும் இதனை தடுக்க முடியும்.

**உளநல ஆலோசகரை நாடல்**

உளவியல்சார் ஆலோசனை வழங்குவதன் மூலம் தற்கொலையைத் தடுக்க முடியும். உளவள துணையாளரிடம் சேர்ப்பதன் மூலம் பிரச்சினையை இனங்கண்டு தீர்வு வழங்கவும் முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உளவளத்துணை முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது. ஆனால் எமது நாட்டில் இன்றும் அதற்கான பூரண அறிவு மக்களிடையே இல்லாமல் காணப்படுகிறது. இவ் உளவளத் துணையை சரியான முறையில் வழங்குவதன் மூலம் மனச்சோர்வைக் களைந்து தற்கொலை எண்ணத்தை நீக்கி மனிதனை சீராக வாழ ஆற்றுப் படுத்துகிறது.

**ஆலோசனை - விழிப்புணர்வு**

ஆலோசனைகள் அறிவுரைகள் வழங்கககூடிய ஆலோசனை மையங்களின் நிறுவுதல் மூலம் உதவுவது உடல் உளரீதியாக உதவியாக இருக்கும். உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவை பரவலாக செயற்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே. நமது நாட்டிலும் சுமித்ரயோ என்ற அமைப்பு 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுத் தற்கொலைத் தடுப்புக்கான விழிப்புணர்வுகள், கருத்தரங்குகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஆய்வின்படி வவுனியா, மொனராகல மாவட்டங்களிலும் வடமேல் மாகாணங்களிலும் அதிக தற்கொலை இடம் பெறுகின்றன என்று கூறுகிறது. இவ் வமைப்பு பாடசாலை, பல்கலைக்கழகம், பின்தங்கிய கிராமங்கள் என விழிப்புணர்வு சார் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

**வாழும் திறன்களை வளர்த்தல்**

நாம் வாழும் வாழ்க்கையில் பல் வேறுவிதமான ஏமாற்றம் தோல்வி என்பன அடிக்கடி ஏற்படும். இதற்காக நமக்கு பக்குவப்பட்ட மற்றும் தெளிவான உள்ளம் தேவை. இதற்காக வாழும் திறன்களான சமுதாயதிறன்கள் பிரச்சினையிலிருந்து எப்படி விடுபடுவது, கையாள்வது (புதியனபற்றி யோசிக்கும் திறன் , பிரச்சினையை எதிர்கொள்ளல், தீர்த்தல்,மனித தொடர்பு), தைரியமாக இருப்பது (நம்பிக்கை, வீரம்) ஆகிய வற்றை வளர்த்துக் கொள்வதன் மூலம் உளரீதியான மேம்பாடு, தெளிவு மற்றும் பக்குவநிலை ஏற்பட்டு வாழ்க்கை சிறப்பாக வழிவகுக்கும்.

**கல்விமுறை- சுயமரியாதை**

சிறுவயதிலிருந்தே ஒழுக்கம் அறிவுசார் வாழ்வியல் கல்வியை சரியான முறையில் போதிப்பது அவசியம். வாழ்வின் சிறப்பு மற்றும் அதன் முக்கியத்துவம் என்பன பற்றிக் கற்பித்தல் வேண்டும். இன்றைய கல்வி முறை தனியே பாடத் திட்டத்தை ஒட்டி அமைகிறதே தவிர வாழ்க்கை மற்றும் ஒழுக்கம் சார்ந்து அமைவது குறைவாகவே காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தனது பலம், பலவீனம், வாய்ப்புக்கள் சாவால்கள் என்பவற்றைக் கண்டறிந்து தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். அத்துடன் ஆரோக்கியமாக முடிவெடுக்

(13ஆம் பக்கம் பார்க்க)

# அதிகரித்த தவறான முடிவுகள்...!

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் திறன், சுயமதிப்பு, சுயகட்டுப்பாடு, பணிவு, சட்டங்களை மதித்தல் என்பன சுயமரியாதையை மேம்படுத்தும்.

**போதைப் பொருள் தடுப்பு**

போதைப் பொருளை இயன்றளவு குறைப்பதன் மூலம் தற்கொலைகள் நிகழ்வது மட்டுமன்றி அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் சீரழிவுகளை குறைக்க முடியும். சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்குப் போதைப் பொருள் விழிப்புணர்வுகளை குடும்பம் மற்றும் பாடசாலையிலிருந்து ஏற்படுத்துவது முக்கியமானதாகும்.

**சுயகட்டுப்பாடு - தன்னம்பிக்கை**

சுயமதிப்பீடு போல சுயகட்டுப்பாடும் ஒருவனை குறிப்பிட்ட சூழலில் சரியான முறையில் தெளிவான முடிவுகளை எடுப்பதற்கும் அவசியமாகிறது. தன்னம்பிக்கை மற்றும் சுவாரஸ்யமான தருணங்களை தாங்கும்திறன் நல்லது-கெட்டது எது என அறியும் திறனை வளர்த்துக் கொள்வதும் முக்கியமாகிறது. மனித நல்லிணக்கம் மற்றும் சமூக உறவுகளை சீராக அமைப்பதன் ஊடாக சுயகட்டுப்பாடு மற்றும் சமூகமனப்பான்மையை வளர்க்கலாம். கடந்தகாலப் பிரச்சினையை நினைத்து தேங்கி நிற்காமல் அடுத்த திட்டத்துக்கு நகரும் உறுதியான மற்றும் பலமான மனம் வேண்டும்.

**தியானம் யோகாசனம் உடற்பயிற்சி செய்தல்**

உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடல் மற்றும் மனம் இரண்டும் நலமான நிலையை அடைகிறது. இதுமட்டுமன்றி தியானம் மற்றும் யோகாசனம் என்பனவும் மனதை ஒருநிலைப்படுத்தவும், நேரான சிந்தனைகளை ஏற்படுத்தவும் மனம் தெளிவடையவும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் உறுதுணையாக அமைகின்றன.

**ஆன்மீகம்- இசை**

ஆன்மீகம் சார் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி மனதை ஓர் பரிசுத்த நிலையை அடைய வழிவகுக்கிறது. அனைத்து சமயங்களும் பொதுவாக நல்ல கருத்துக்கள் மூலம் மனிதனை நேர்வழி நடத்தவே உதவுகின்றன. இவ்வாறான அறநெறி செயற்பாட்டில் ஆர்வம் கொண்டு ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கிய நல்வாழ்க்கையை கட்டியெழுப்பலாம். “இசையில் வசமாகா இதயம் எது” எனக் கூறுவார்கள். நல்ல மனதுக்கு இனிமையான இசையை கேட்பதன் மூலம் தமது எண்ண ஓட்டங்களைச் சிறப்பாக்கவும் உணர்வுகளின் முகாமைத்துவம் செய்யவும் உதவுகிறது.

இவ்வாறான தடுப்புமுறைகள் மற்றும் தீர்வுகளை பின்பற்றுவதன் மூலம் தற்கொலையை தடுக்கலாம். அத்தோடு தற்கொலை தடுப்பு பற்றிய பரப்புரையை மக்கள் கருத்தாக மாற்றி அனைவரும் கரம்கோர்த்து செயற்பட்டால் தற்கொலை எனும் கொடிய பிரச்சினையை முற்றாக ஒழிக்க முடியும்.

ஆண்-பெண், இரவு-பகல், இன்பம்-துன்பம், வாழ்வு-தாழ்வு, பிறப்பு-இறப்பு என அனைத்தையும் இரண்டாகத் தந்த இறைவன் சிக்கல்-தீர்வு என்ற இரண்டையும் தந்துள்ளான். ஆதலால் ஒரு சிக்கல் ஏற்பட்டாலும் உரிய தீர்வை நாம் போராடி பெறவேண்டியது அவசியம். ஏனெனில் பிரச்சினையை எதிர்கொண்டு அதனை வெற்றிகொண்டு வாழ்வதனாலேயே இப்போட்டி நிறைந்த உலகில் வாழ முடியும்.

வாழ்க்கை மீது நாம் எப்போதும் பெரிய நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனெனில் அடுத்த நொடி என்ன நடக்கும் எனத் தெரியாத சுவாரஸ்யமான விளையாட்டுதான் வாழ்க்கை. தன்னை முதலில் நேசித்து பிறரையும் நேசிக்கும் வாழ்க்கை மனமகிழ்ச்சி, நிம்மதி தரக்கூடியது. இந்த வாழ்க்கை நமக்கு வரப்பிரசாதம் ஆகும். நம்பிக்கையுடன் வாழ்ந்தால் நலமான, சிறப்பான வாழ்க்கையை வாழலாம்.

**மகேஸ்வரன் கலைச்செல்வன்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# கதிரேசன் இந்து மகளிர் கௌரவிப்பு விழா

(மஸ்கெலியா நிருபர்)

நாவலப்பிட்டி, கதிரேசன் இந்து மகளிர் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்றுச் சனிக்கிழமை (30) அதிபர் திருமதி. வனஜா தமிழ்ச்செல்வன் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கலந்துகொண்டார்.

இதன் போது விருந்தினர்கள் பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவால் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

முன்னாள் நகரசபைத் தலைவர் அமல் பிரியங்கர பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களால் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு விழா

## நிறைகுடங்கள், கொடிகள், ஆலவட்டங்களுடன் பண்பாட்டு பேரணி சகிதம் கோலாகலமாக இன்று















யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நிறுவப்பட்டு நூறு வருடங்கள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் கல்லூரித்தின விழா இன்று கலாசாலையில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே. கா.கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முதல்வர் சாந்தனி வாகீசன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளை தொடர்ந்து நூறு ஆண்டுகளை வெளிப்படுத்தும் வகையில் நூறு நிறைகுடங்கள், கொடிகள், ஆலவட்டத்துடன் பண்பாட்டு பேரணி இடம்பெற்றது.

தொடர்ந்து ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நூற்றாண்டு விழா ஆரம்பமானது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கேக் வெட்டப்பபட்பட்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கலாசாலையின் வெளியிடான 'காலாதீபம்' நூலும் வெளியிடப்பட்டது. நூற்றாண்டு விழாவின் சிறப்பு நிகழ்வாக கலாசாலையின் ஓய்வுநிலை பிரதி அதிபரான பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு எழுதிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய சிறப்பு ஆய்வான 'வடக்கின் ஆசிரியர் கலாசாலை' எனும் நூலும் வெளியிடப்பட்டது.

இந்நூலுக்கான கருத்துரையினை கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ ஆலோசகருமான சரா.புவனேஸ்வரன் நிகழ்த்தினார்.

கலாசாலை கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.



# வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலில் கப்பல் திருவிழா

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய ஏழாம் திருவிழாவான கப்பல் திருவிழா நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

பகல் திருவிழாவைத் தொடர்ந்து இரவு விஷேட மேளக் கச்சேரிகள் இடம் பெற்றுது. அதிகாலை வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் போது வடக்கு வீதியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கப்பலாட்டும் வைபவம் இடம் பெற்றது.

இதன்போது கப்பல் திருவிழாவின் கதைகள் வாசிக்கப்பட்டு பாடப்பட்டு கப் பலாட்டும் வைபவம் இடம்பெற்றது.

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆல யக் கப்பல் திருவிழாவில் தென்னிந்திய பிரபல பாடகி நித்யஶ்ரீ குழுவினரின் இசை நிகழ்வும் இடம்பெற்றது.

அந்நியர்கள் நாகர்கோயில் பகுதிக்கு வந்து இங்குள்ளவர்களைப் பிடித்து கப்பலில் ஏற்றிச்செல்ல முற்பட்டபோது நாகதம்பிரான் கப்பலைத் தடுத்து இவ்வூர் மக்களை மீட்டமை தொடர்பாக – சரித்திரக் கதையை நினைவூட்டும் வகையில் இந்தக் கப்பல் திருவிழா நடைபெறுவது வழமை.









# சிவாஜிக்கு இன்று பிறந்தநாள் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை



நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பிறந்தநாளையொட்டி அவரது உருவப் படத்துக்கு தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 96ஆவது பிறந்த நாள் இன்று (01) உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த சிவாஜியின் உருவப் படத்துக்கு தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

மேலும் சிவாஜியின் மகன்களான ராம்குமார், பிரபு உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

நடிப்பின் இமயமாகத் திகழ்ந்த சிவாஜி கணேசன் தமிழில் 300க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், 2001 ஆம் ஆண்டு ஜுலை 21ஆம் திகதி இயற்கை எய்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குன்னூரில் பஸ் கவிழ்ந்து உயிரிழந்தவர்கள் ஒரே ஊரவர்கள்

## தந்தையும் மகளும் பலியான சோகம்



குன்னூரில் சுற்றுலாப் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழுந்தவர்கள் ஒரே கிராமத்தைச் சேர்ந்த 9 பேர் எனவும், அவர்களுள் தந்தையும் மகளும் அடங்குவர் எனவும் அறியவந்துள்ளது. இதனால், அப்பிரதேசம் துயரத்தில் ஆழ்ந்துள்ளது.

நேற்று (30) மாலை குன்னூர் மேட்டுப்பாளையம் வீதியின் மரப்பாலம் என்ற பகுதியில் பஸ் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 50 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர்.

தற்போது, இந்த விபத்தில் கடையம் என்ற ஒரே இடத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன், அவர்களுள் தந்தையும் மகளும் உயிரிழந்தமையும் பெருந்துயரை ஏற்படுத்தியுள்ளதுடன், அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# கேரளாவில் கரை ஒதுங்கிய பாரிய திமிங்கலம்

கேரள மாநிலம் கோழிக்கோடு கடற்கரையில் 50 அடி நீளமுள்ள நீல நிற திமிங்கலம் நேற்று (30) கரை ஒதுங்கி உள்ளது.

சமீப காலமாக கோழிக்கோடு கடற்கரையில் இவ்வளவு பெரிய திமிங்கலம் கரை ஒதுங்கியதில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

கரை ஒதுங்கிய திமிங்கலத்தைப் பார்ப்பதற்கு பெருமளவில் மக்கள் அங்கு கூடினர்.

திமிங்கலம் அழுகும் நிலையில் இருப்பதால், இறந்து 2 நாட்களுக்கு மேல் இருக்கலாம் என மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்த தகவல் கிடைத்ததும் கோழிக்கோடு மாநகராட்சி சுகாதார அதிகாரிகள் மற்றும் பலர் அங்கு விரைந்தனர். நீல திமிங்கலம் இறந்தது எப்படி? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

தொடர்ந்து அங்கேயே பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு, அதன்பிறகு ராட்சத குழி தோண்டி புதைப்பது என அதிகாரிகள் முடிவு செய்தனர்.

அதேவேளை திமிங்கலத்தின் உடல் மாதிரிகள் போபாலில் உள்ள உயர் பாதுகாப்பு விலங்கு நோய்களுக்கான தேசிய நிறுவனத்துக்கு மேலதிக பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளது.

அதன் பிறகே திமிங்கலம் இறந்தமைக்கான காரணம் தெரியவரும் என்று சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மாலைதீவு அதிபர் தேர்தலில் சீனாவின் ஆதரவாளர் வெற்றி!

## இந்தியாவுக்கு சிக்கலாகுமா?



மாலைதீவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் சீன ஆதரவு வேட்பாளரான அந்நாட்டின் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சியின் முய்ஜு வெற்றி பெற்றுள்ளார். இதனால், இந்தியாவுக்கு சிக்கல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

புவிசார் அரசியலில் இந்தியாவுக்கு முக்கிய நாடுகளில் ஒன்றாக மாலைதீவு இருக்கின்றது. இதனால், இந்தியா மாலைதீவுக்குப் பல உதவிகளைச் செய்து வருகிறது.

அதேவேளை, இந்தியாவுடன் வரிந்து கட்டி நிற்கும் சீனாவும் தொடர்ச்சியாகப் பல உதவிகளைச் செய்து வருகின்றது.

இதனால், மாலைதீவில் நடைபெற்ற அதிபர் தேர்தல் முடிவுகள் இந்தியா, சீனாவுக்கு முக்கியமானதாகப் பார்க்கப்பட்டது.

மாலைதீவு தேர்தலில் போட்டியிட்ட பிராஹிம் முகமது இந்தியா ஆதரவு நிலைப்பாடுடையவர். முகமது முய்ஜு சீனா ஆதரவு நிலைப்பாடுடையவர்.

இவர் இந்தியா வெளியேறு என்ற பிரசாரத்தையும் முன்னெடுத்திருந்தார்.

மாலைதீவின் விதியின்படி எந்தவொரு வேட்பாளருக்கு 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் கிடைக்கிறதோ அவரே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

கடந்த செப்ரெம்பர் 9ஆம் திகதி நடந்த வாக்குப்பதிவில் எவருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்கவில்லை.

இதையடுத்து இரண்டாம்கட்ட தேர்தல் நடைபெற்றது. இதில் இப்ராஹிம் முகமது சோலிஹ் மற்றும் முய்ஜு இடையே நேரடிப் போட்டி நிலவியது.

இதில் சீனா ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்த வேட்பாளர் முகமது முய்ஜு வெற்றி பெற்றுள்ளார்.

இந்த இரண்டாம் கட்ட வாக்குப் பதிவில் அவருக்கு 54.06 சதவீத வாக்குகள் கிடைத்தன. 45 வயதான முய்ஜு, எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி மாலைதீவு அதிபராகப் பதவியேற்கவுள்ளார்.

இதனால் எதிர்வரும் காலங்களில் இந்தியா – மாலைதீவு உறவு மீண்டும் சிக்கலானதாக மாற வாய்ப்பு உள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமெரிக்க நிதிப்பிரச்சினைக்கு அனுமதி கிட்டியதால்

# முடக்கம் தவிர்ப்பு!

## அரச செயற்பாடுகள் சீர்குலையும் அபாயம் நீங்கியது



அரச பணிகளுக்கான செலவுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் மசோதாவை நிறைவேற்ற அனுமதி கிடைத்தமையால் முடங்கும் அபாயத்திலிருந்து அமெரிக்கா தப்பியுள்ளது.

அமெரிக்காவில் அரச பணிகளுக்கான செலவுகள், ஊழியர்களுக்கான சம்பளம் உள்ளிட்டவற்றுக்கு நிதி ஒதுக்கும் வகையில் அவ்வப்போது, அந்த நாட்டின் நாடாளுமன்றில் மசோதா தாக்கல் செய்யப்படும்.

இவ்வாறு தற்போதைய நிலையில், நேற்று வரைக்கான நிதிக்கு மாத்திரம் ஒப்புதல் உள்ளது. எதிர்வரும், நவம்பர் மாதம் வரையான செலவுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் மசோதா சமீபத்தில் நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், ரஷ்யா போர் தொடுத்துள்ள கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கு நிதியுதவி அளிப்பதற்கு, எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இதனால், செனட் சபையில், இந்த மசோதா நிறைவேறினாலும், பிரதிநிதிகள் சபையில் நிறைவேறுவதில் இழுபறி ஏற்பட்டது. பிரதிநிதிகள் சபை சபாநாயகரான கெவின் மெக்கார்த்தி, நிதி ஒதுக்க ஆதரவு தெரிவித்தாலும், அவரது குடியரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் ஆதரவு தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

இந்த அனுமதி கிடைக்காவிடில் அரச பூங்காக்கள், நினைவிடங்கள் உள்ளிட்டவை முதலில் மூடப்படும். பின்னர் ஒவ்வொரு அவசியமில்லாத துறைகள் மூடப்படும். பணியாளர்களுக்கு வேலை இருக்காது. சம்பளமும் கிடைக்காது.

இதனால், ஆளும் ஜனநாயகக் கட்சி, இந்த இழுபறியை முறியடிக்க முயற்சிகள் மேற்கொண்டது.

இதன்பயனாக, உக்ரைனுக்கு உதவ வேண்டாம் என்ற நிபந்தனையுடன் மசோதா நிறைவேற்ற ஒப்புதல் கிடைத்துள்ளது.

இதனால், 2019ஆம் ஆண்டு போல மீண்டும் அமெரிக்கா முடங்கும் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது.